# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) உலகமயமாக்கல் என்றால் என்ன?

**பதில் :** உலகமயமாக்கல் என்பது உலக பொருளாதார நாடுகளை ஒருங்கிணைப்பதாகும். அடிப்படையில், இது சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயல் முறையை குறிக்கிறது.

2) உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக (அல்லது) உலகமயமாக்கலின் மூன்று நிலைகளைக் கூறுக.

**பதில் :** உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

1. தொன்மையான உலகமயமாக்கல்
2. இடைப்பட்ட உலகமயமாக்கல்
3. நவீன உலகமயமாக்கல் என்பனவாகும்.

3) பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**பதில் : பன்னாட்டு நிறுவனம் (MNC) :**

1. நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெரு நிறுவனம் பன்னாட்டு நிறுவனம் எனப்படும்.
2. பன்னாட்டு நிறுவனங்களை (MNC), சர்வதேச நிறுவனங்கள் அல்லது பன்னாட்டு அமைப்பு எனவும் கூறலாம்.

எடுத்துக்காட்டு: பெப்சி நிறுவனம், பஜாஜ், பாரத ஸ்டேட் வங்கி.

4) உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?

**பதில் : உலகமயமாக்கல் சார்ந்த சீர்திருத்தங்கள் :**

(i) இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை சில தொழிற்சாலைகளை தவிர தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
(ii) பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
(iii) இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
(iv) வெளிநாட்டு தனியார் துறை நடப்பு கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்க்கத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
(v) அயல்நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக திருத்தப்பட்டது.
(vi) இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான நீர்மை விகிதம் (SLR) அதிகரிக்கப்பட்டது.

5) நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

**பதில் :** நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும்.

6) “நியாயமான வர்த்தக நடைமுறைகளின்” ஏதாவது இரு கோட்பாடுகளை எழுதுக.

**பதில் :** (i) பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
(ii) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு.
(iii) நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.
(iv) குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.
(v) பாகுபாடு அல்லாத பாலின சமபங்கு மற்றும் சங்க சுதந்திரம் ஆகியவற்றுக்கு அர்பணித்தல்.

7) உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.

**பதில் : உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கம் :**

(i) ஒரு சிறந்த பொருளாதாரம் மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
(ii) வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.

(iii) உலகமயமாக்கல் வேகமாக வர்த்தகத்தை அதிகரித்து அதனால் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.

(iv) புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

(v) உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.

(vi) இது பண்டங்களின் ஓட்டத்தை தாராளமாக அதிகரிக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

8) தென்னிந்தியாவில் ஐரோப்பிய வணிகர்கள் வர்த்தக நடவடிக்கைப் பற்றி நீ அறிவது என்ன?

**பதில் :** வாஸ்கோடகாமாவால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக புதிய கடல் பாதை கண்டுபிடிப்பட்டது. அது நாகரிக உலகத்தின் மீது பல விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியாவின் கடலோர மற்றும் கடல் வர்த்தகம் ஐரோப்பியர்களால் முற்றுரிமை பெற்றிருந்தது.

9) நவீன உலகமயமாக்கல் என்றால் என்ன?

**பதில் :** 19 ஆம் நூற்றாண்டில் உலகமயமாக்கலின் வருகை நவீன வடிவத்தை நெருங்கியது. 19 மற்றும் 20 ம் நூற்றாண்டுகளுக்கு இடையே நடைபெற்ற உலகமயமாக்கல் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை கொண்டிருந்தன. அவை இந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டது.

10) கீழ்க்கண்டவற்றுள் விரிவாக்கம் செய்க.

(i) GATT

(ii) WTO

(iii) FDI

(iv) TRIPS

(v) TRIMS

**பதில் :** (i) GATT - சுங்கவரி வாணிபம் குறித்த பொது உடன்பாடு

(ii) WTO - உலக வர்த்தக அமைப்பு

(iii) FDI - வெளிநாட்டு நேரடி முதலீடு

(iv) TRIPS - அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள்

(v) TRIMS - வர்த்தக தொடர்புடைய முதலீட்டு நடவடிக்கைகள்

11) உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?

**பதில் :** 1. சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.

2. பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

3. இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.

4. வெளிநாட்டு தனியார் துறை நடப்புக் கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.

12) உலக மயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக,

**பதில் :** **நேர்மறைத்தாக்கம்:**

1. ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.

2. வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.

3. உலகமயமாக்கல் வர்த்தகத்தை வேகமாக அதிகரித்து அதனால் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.

13) TRIPs சிறுகுறிப்பு எழுதுக.

**பதில் :** TRIPs: (அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள்)

1. அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது "ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல்" என வரையறுக்கலாம்.

2. TRIPs ன் கீழ், பண்டங்கள் அல்லது செயல்முறைகள், அனைத்து துறைகளின் தொழில் நுட்பங்களில் எந்தவொரு கண்டுபிடிப்புக்கும் காப்புரிமை வழங்குகிறது.

3. TRIPs ஒப்பந்தத்தில் ஏழு பகுதிகள் அறிவார்ந்த சொத்து உரிமைகளை உள்ளடக்கியுள்ளது.

14) அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் குறிப்பு வரைக.

**பதில் :** **அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் 1974:**

இச்சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாகக் குறிப்பிடுகிறது.

15) உலகமயமாக்கலின் எதிர்மறைத் தாக்கங்களை குறிப்பிடுக.

**பதில் :** 1. நாடுகளுக்கிடையே மிக அதிகமான மூலதனம், வருமானத்தின் நியாயமற்ற மற்றும் ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது.

2. தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம் இருப்பதால், சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகின்றன என்பது அச்சத்திற்குரியதாகும்.

3. முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களைப் பிரித்தெடுத்தலும் ஒரு பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்

4. அந்நிய செலாவணியைப் பெறுவதற்காக, இயற்கை வளங்கள் மிக அதிகமாக விரைவாக சுரண்டப்படுகிறது.

5. சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

## 5 மதிப்பெண் வினாக்கள்

4 x 5 = 20

16) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

**பதில் : MNC யின் பரிணாம வளர்ச்சி:**

1. கிழக்கு இந்திய நிறுவனம், ஒரு வர்த்தக நிறுவனமாக இந்தியாவுக்கு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது.

2. 1920களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களைக் கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன.

3. 1950களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளன. இவற்றில்அதிகமானது அமெரிக்காவினுடையது ஆகும்.

4. இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில், 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும்.

**MNCயின் நன்மைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.

2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கிறன்றன.

**MNCயின் தீமைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.

2. பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுச்சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.

3. ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில், பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

17) 'உலக வர்த்தக அமைப்பு' பற்றி எழுதுக.

**பதில் : உலக வர்த்தக அமைப்பு (WTO)**

1. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (WTO) அமைப்பதற்கு காட் (GATI) உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

2. இந்த அமைப்பை அமல்படுத்திட 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது.WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.

3. தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைந்துள்ளது.

**WTO வின் குறிக்கோள்கள்:**

1. அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.

2. வர்த்தக தாராயமயமாக்கலுக்கான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.

3. வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்

4. நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்

5. உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.

6. முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.

7. முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல் என்பனவாகும்.

18) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

**பதில் : உலகமயமாக்கலின் சவால்கள்:**

1. உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
2. வளர்ந்துவரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.
3. உலகமயமாக்கலினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில் முறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்குக் கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
4. இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
5. உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தளம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
6. மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல் நலக்குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.
7. உலகமயமாக்கலால் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

19) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

**பதில் : MNC யின் பரிணாம வளர்ச்சி:**

1. கிழக்கு இந்திய நிறுவனம், ஒரு வர்த்தக நிறுவனமாக இந்தியாவுக்கு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது.
2. 1920களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களைக் கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன.
3. 1950களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளன. இவற்றில்அதிகமானது அமெரிக்காவினுடையது ஆகும்.
4. இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில், 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும்.

**MNCயின் நன்மைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.
2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கிறன்றன.

**MNCயின் தீமைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
2. பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுச்சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
3. ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில், பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.